# இரசாயனவியல்

## அற்ககோலின் கட்டமைப்பு, காபன் ஒட்சிசன் பிணைப்பு, ஒட்சிசன் ஐதரசன் பிணைப்பின் முனைவுத் தன்மை, தாக்கங்கள்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி - 9.0. ஒட்சிசனைக் கொண்டுள்ள சேதனச் சேர்வைகளின் கட்டமைப்பிற்கும் இயல்புகளுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வு செய்வர்.

**தேர்ச்சி மட்டம் - 9.1.அற்ககோலின் கட்டமைப்பு, காபன் ஒட்சிசன் பிணைப்ப, ஒட்சிசன் ஐதரசன் பிணைப்பின் முனைவுத் தன்மை, தாக்கங்கள் என்பவற்றை நுணுகி ஆராய்தல்.**




### அற்ககோல்கள்

- OH கூட்டம் உடைய சேர்வைகள் அற்ககோல்கள் எனப்படும்.

  பொதுக்குறியீடு = ROH (R = அற்கையில் கூட்டம்)

  பொதுச்சூத்திரம் $C_nH_{2n+1}OH$ $(C_nH_{2n+2}O)$

- அற்ககோல்கள் முதல், வழி, புடை என வகைப்படுத்தப்படும்.




முதல் அற்ககோல்




வழி அற்ககோல்




புடை அற்ககோல்

1. $C_4H_{10}O$ மூலக்கூற்றச் சூத்திரமாகக் கொண்ட அற்ககோல்களின் கட்டமைப்பை வரைக?

2. அவற்றை முதல், வழி, புடை அற்ககோல்களாக வகைப்படுத்துக.?



தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசானயவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசானயவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பௌதீக இயல்புகள்



காபன் எண்ணிக்கை குறைந்த அற்ககோல்கள் பொதுவாக திரவங்கள் ஆகும்.

$R — O^{S-} — H^{S+}$

- அற்ககோல்களின் O — H பிணைப்பில் O இன் மின்எதிர்த்தன்மை காரணமாக மேற்காட்டியவாறு முனைவாக்கமடையும்.
- இதனால் அற்ககோல் மூலக்கூறுகளுக்கிடையில் வலிமையான H பிணைப்புக்கள் தோற்றுவிக்கப்படும்.
- எனவே அற்ககோலின் கொதிநிலை ஒத்த மூலக்கூற்றுச் சூத்திரமுடைய அற்ககோல்கள், ஈதர்கள் என்பவற்றிலும் பார்க்க உயர்வாக இருக்கும்.

Q2. $C_nH_{2n+1}O$, $C_nH_{2n+2}$, n = 2 ஆயின் மூலக்கூற்றுச்சூத்திரங்களுக்கான கட்டமைப்புக்களை எழுதி அவற்றின் கொதிநிலைகளை ஏறுவரிசையில் தருக?





அற்ககோல்கள் தொடரில் மேலிருந்து கீழே செல்லும் போது கொதிநிலை அதிகரித்துச் செல்லும்.

**காரணம்:-** அற்ககோல் மூலக்கூறுகளுக்கிடையில் H பிணை லண்டன் இடைத்தாக்கமும் காணப்படும். கூட்டம் மேலிருந்து கீழாக செல்லும் போது லண்டன் கலைவு விசையின் பருமன் அதிகரிக்கின்றது.

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசானயவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசானயவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அற்ககோல்களின் நீரில் கரைதிறன்



- சார்மூல்கூற்றுத்திணிவு குறைந்த அற்ககோல்கள் நீரில் கரையக்கூடியவை. இவற்றில் நீரில் கரையும் திறன் —OH கூட்டம் நீருடன் ஏற்ப்படுத்தப்படும் —H பிணைப்பால் சாதகமாக்கப்படும். C சங்கிலியின் நீளம் அதிகரிக்கும் போது லண்டன் கலைவு விசை காரணமாக கரைதிறன் குறைந்து செல்லும்.
- $H_2O$ ஒரு முனைவுள்ள கரைப்பான். அற்ககோலில் உள்ள நீண்ட அற்கையில் கூட்டம் முனைவற்றது. இதனால் அற்கையில் கூட்டத்தின் நீரில் கரைதிறன் குறைகின்றது.

Q3. Methyl alcohol , propan-1-ol, butan-1-ol, pentan-1-ol என்பவற்றின் கொதிநிலையையும் நீரில் கரைதிறனையும் ஏறுவரிசையில் தருக?



### அற்ககோலின் தாக்கங்கள்

- O—H பிணைப்பு
- C—O பிணைப்பு
- நீக்கல் தாக்கம்

## O—H பிணைப்பு உடைய தாக்கம்



**1) Na உடன் தாக்கம்**

$$2ROH + 2Na \longrightarrow 2RO^{-}Na^{+} + H_{2\,(g)}$$

$$2CH_3CH_2OH + 2Na \longrightarrow 2CH_3CH_2O^{-}Na^{+} + H_{2\,(g)}$$

இத்தாக்கம் அற்ககோலின் அமில இயல்பையும் எடுத்துக் காட்டுகின்றது.

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசானயவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசானயவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**Note**

$$RO^{-}Na^{+} + H_2O_{(l)} \longrightarrow ROH_{(aq)} + Na^{+}_{(aq)} + OH^{-}_{aq)}$$

$RO^{-}$ இது ஒரு வன்மூலம் ஆகும். மேலும் இது கருநாடியாகத் தொழிற்படும்.

**வினாக்கள்**

**Q4.** $CH_3Br$ இற்கும் $CH_3CH_2OH/Na$ இற்கும் இடையிலான தாக்கத்தின் பிரதான விளைவைத் தருக?



## எசுத்தராக்கத் தாக்கம்

அற்ககோல்கள் காபொட்சிலிக்கமிலத்துடன் செறிந்த $H_2SO_4$ ,ன் முன்னிலையில் வெப்பமேற்றும் போது பழமணங்களின் ஒத்த வாசனையுடைய எசுத்தர்களைக் காண்க?

$$RCOOH_{(l)} + R^{1}OH_{(l)} \underset{\Delta}{\overset{Con\ H_2SO_4}{\rightleftharpoons}} R-\overset{\overset{O}{\|}}{C}-OR^{1}_{(l)} + H_2O_{(l)}$$

**Note**

இத்தாக்கம் மீளும் தாக்கமாகும்.

Con $H_2SO_4$ தாக்கத்தில் ஊக்கியாக பயன்படும்.

$$CH_3COOH_{(l)} + CH_3CH_2OH_{((l)} \underset{\Delta}{\overset{Con\ H_2SO_4}{\rightleftharpoons}} CH_3-\overset{\overset{O}{\|}}{C}-OCH_2CH_{3(l)} + H_2O_{(l)}$$


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



பின்வரும் தாக்கங்களுக்கான விளைவுகளைத் தருக?

1. 

2. $CH_3COOH + CH_3-\underset{\large OH}{\underset{|}{CH}}-CH_3 \xrightarrow{Con\ H_2SO_4}$

3. 

4. 



Methyl salicylate

இவ் எசுத்தர் வின்ரர் கிறீம் தைல மணமுடையது.

**C—O பிணைப்பு உடைந்து நடைபெறும் தாக்கங்கள்**



$ROH \xrightarrow{PCl_3} RCl$

$ROH \xrightarrow{PCl_5} RCl$

$ROH \xrightarrow{PBr_3} RBr$

$ROH \xrightarrow{PI_3} RI$

இத் தாக்கங்கள் கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கங்கள் ஆகும்.

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசானயவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசானயவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright© www.e-thaksalawa.moe.gov.lk

## HX உடன் தாக்கங்கள்





$$ROH \xrightarrow{HX} RX$$

$$ROH \xrightarrow{HBr} RBr$$

$$ROH \xrightarrow{HI} RI$$




- மேற்தாக்கத்தில் ROH மூலமாகவும் HBr அமிலமாகவும் $Br^-$ கரு நாடியாகவும் தொழிற்படுகின்றது.

## Lucas இன் சோதனைப் பொருளுடன் தாக்கம்



நீரற்ற $ZnCl_2$ , Con HCl கொண்ட கலவை Lucas இன் சோதனைப் பொருள் எனப்படும்.

$$ROH \xrightarrow{\text{நீரற்ற } ZnCl_2 / Con\ HCl} RCl$$

- Lucas இன் சோதனைப் பொருள் முதல், வழி, புடை அற்ககோல்களை வேறுபிரித்தறிய உதவும்.
- அற்கையில் ஏலைட்டுக்கள் நீரில் கரையாத் தன்மையின் அடிப்படையில் தாக்க ஊடகத்தில் கலங்கல் தன்மை அவதானிக்கப்படும்.
- கலங்கல் உருவாக எடுக்கும் நேரத்தின் அடிப்படையில் முதல், வழி, புடை அற்ககோல்கள் வேறுபடுத்தப்படுகின்றன.

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசாயனவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசாயனவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



$C_4H_9OH$ மூலக்கூற்றுச் சூத்திரமுடைய —$CH_2$—$CH_2$— எனும் கட்டமைப்பைக் கொண்டிராததுமான சேர்வைகளின் கட்டமைப்புக்களைத் தந்து அவற்றை எங்கனம் Lucas இன் சோதனைப் பொருளைப் பயன்படுத்தி வேறுபடுத்தி இனங்காண்பீர்?

புடை அற்ககோல், வழி அற்ககோலிலும் பார்க்க ஏன் Lucas இன் சோதனைப் பொருளுடன் குறுகிய நேரத்தில் கலங்கலைத் தருகின்றது?



## நீக்கல் தாக்கம்

அற்ககோல்கள் Con $H_2SO_4$ or $AL_2O_3$ or $P_2O_5$ or பாகுத்தன்மையான $H_3PO_4$ என்பவற்றுடன் நீக்கல் தாக்கத்தின் நீரகற்றப்பட்டு அற்கீன் விளைவாக பெறப்படும்.

$$CH_3CH_2OH \xrightarrow[\Delta\ (160^\circ c - 170^\circ c)]{Con\ H_2SO_4} CH_2{=}CH_2$$

$$CH_3CH_2CH_2OH \xrightarrow[\Delta\ (350^\circ c - 400^\circ c)]{Al_2O_3} CH_2CH{=}CH_2$$




நீரகற்றல் தாக்க வீதம் புடை, வழி, முதல் அற்ககோல் என அதிகரித்துச் செல்லும்.

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசானயவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசானயவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



1. $C_4H_{10}O$ எனும் மூலக்கூற்றுச் சூத்திரமுடைய அற்ககோல்கள் யாவற்றினதும் கட்டமைப்புக்களை தந்து அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே Con $H_2SO_4$ உடன் உருவாக்கும் விளைவுகளின் கட்டமைப்புக்களைத் தருக?
2. இவற்றில் எது தளமுனைவாக்கிய ஒளியின் பாதையை மாற்றக்கூடியது?
3. அவ்அற்ககோலில் இருந்து பெறப்படும் விளைவுகள் ஈர் வெளிமய சமபகுதியங்களின் கட்டமைப்பை வரைக?

## அற்ககோல்களின் ஒட்சியேற்றம்

* அற்ககோல்களை ஒட்சியேற்றுவதற்கு $H^+/ KMnO_4$ , $H^+/ K_2Cr_2O_7$ , $H^+/ CrO_3$ என்பவற்றில் ஒன்று பயன்படுத்தப்படலாம்.
* ஒட்சியேற்றத்தின் விளைவுகள் முதல் , வழி, புடை என்பவற்றிற்கு ஏற்ப மாறுபடும்.






**புடை அற்ககோல்களில் ஒட்சியேற்றம் கடினம்..**

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசாயனவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசாயனவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



முதல் அற்ககோல்களில் இருந்து அல்டிகைட்டை பெறுவதற்கு ( $C_5H_5\overset{+}{N}HCrO_3\overset{-}{Cl}$ ) பிரிடினியன் குளோரோ குரோமேற்று பயன்படும். (PCC)

$$RCH_2OH \xrightarrow{PCC} R-\overset{\overset{O}{\|}}{C}-H$$

$$CH_3CH_2OH \xrightarrow{PCC} CH_3-\overset{\overset{O}{\|}}{C}-H$$






பின்வரும் மாற்றீடுகளை எங்கனம் மேற்கொள்வீர்?

1. $CH_3COOH \longrightarrow CH_3CHO$

2. $CH_3CH_2CH_2Br \longrightarrow CH_3CH_2CHO$

3. $CH_3-\underset{\underset{OH}{|}}{CH}-CH_3 \longrightarrow CH_3CH_2CHO$

4. 


5. $CH_3CH_2CH_2OH \longrightarrow CH_3-\overset{\overset{O}{\|}}{C}-CH_3$


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





மாத்திரம் சேதனனச் சேர்வையாகப் பயன்படுத்தி ர்ப டிஎஹ



எனும் கோர்வையை எவ்வாறு பயன்படுத்துவீர்?

## அற்ககோல்கள்






**ஒப்படை**

முதல் அற்ககோல், வழி அற்ககோல், புடை அற்ககோல் ஒவ்வொன்றிற்கும் 5 கட்டமைப்புக்களைத் தந்து அவை

a) PCC

b) $H^+/K_2Cr_2O_7$ உடன் உருவாக்கும் விளைவுகளைத் தருக?

தொகுப்பு : திரு.N.மகேஸ்வரன் , இரசானயவியல் ஆசிரியர் (யா/புனித பரியோவான் கல்லூரி)
திருமதி.N.கலா , இரசானயவியல் ஆசிரியர் (யா/இந்து மகளீர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , த.தொ.தொ. ஆசிரியர் (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk